# இயல் 2 - ஈடில்லா இயற்கை

**வகுப்பு : 8**

**பாடம் : தமிழ்** **ஓடை**

## அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. பள்ளிக்குச் சென்று கல்வி ................. சிறப்பு

**அ) பயிலுதல்** ஆ) பார்த்தல் இ) கேட்டல் ஈ) பாடுதல்

2.செஞ்சொல் மாதரின் வள்ளைப் பாட்டிற்கேற்ப முழவை மீட்டுவது ...........

அ) கடல் **ஆ) ஓடை** இ) குளம் ஈ) கிணறு

3.'நன்செய்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

அ) நன் + செய் ஆ) நன்று + செய் **இ) நன்மை + செய்** ஈ) நல் + செய்

4.'நீளுழைப்பு' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ...............

அ) நீளு + உழைப்பு ஆ) நீண் + உழைப்பு இ) நீள் + அழைப்பு **ஈ) நீள் + உழைப்பு**

5. சீருக்கு +ஏற்ப – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ............

அ) சீருக்கு ஏற்ப **ஆ) சீருக்கேற்ப** இ) சீர்க்கேற்ப ஈ) சீருகேற்ப

6. ஓடை + ஆட – என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ..............

அ) ஓடைஆட **ஆ) ஓடையாட** இ) ஓடையோட ஈ) ஓடைவாட

## ஆ. குறுவினா

**1. ஓடை எவ்வாறு ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்?**

ஓடை கற்களில் உருண்டும், தவழ்ந்தும், நெளிந்தும், சலசல என்ற ஒலி எழுப்பியபடி ஓடுவதாக வாணிதாசன் கூறுகிறார்.

**2. ஓடை எழுப்பும் ஒலிக்கு எதனை உவமையாகக் கவிஞர் வாணிதாசன் கூறுகிறார்?**

ஓடை எழுப்பும் ஒலிக்கு சிறந்த சொற்களைப் பேசும் பெண்கள் பாடும் வள்ளைப் பாட்டின் சிறப்புக்கேற்ப முழங்கும் முழவையொலியை உவமையாகக் கவிஞர் வாணிதாசன் கூறுகிறார்.

## இ. சிறுவினா

**1. ஓடையின் பயன்களாக வாணிதாசன் கூறுவன யாவை?**

(i) நன்செய், புன்செய் நிலங்களுக்கு நீர்வளம் தந்து பயிர்களைச் செழிக்கச் செய்கிறது.

(ii) அவ்வாறு விளைந்த பயிர்கள் மூலம் உணவு தந்து நாட்டின் வறுமையைப்

போக்குகிறது.

(iii) கொஞ்சி மகிழும் அலைகளால் கரையை மோதுகிறது.

(iv) குளிர்ச்சியைத் தரும் புற்களுக்கு இன்பம் சேர்க்கிறது.

(v) நெஞ்சத்தில் இரக்கம் இல்லாதவர் வெட்கப்படுமாறு இடையறாது ஓடித் தன் உழைப்பைக் கொடையாகத் தருகிறது

### ஈ. சிந்தனை வினா

**1. வள்ளைப்பாட்டு என்பது நெல்குத்தும் பொழுது பாடப்படும் பாடலாகும். இதுபோல் வேறு எந்தெந்தச் சூழல்களில் என்னென்ன பாடல்கள் பாடப்படுகின்றன?**

(i) ஏற்றப்பாடல் – ஏற்றத்தின் மூலம் நீர் இறைக்கும்போது பாடப்படும்.

(ii) ஏர்ப்பாடல் – வயலில் மாடுகளைப் பூட்டி ஏர் உழும்போது பாடப்படும்.

(iii) நடவுப் பாடல் – வயலில் நாற்று நடும்போது பாடப்படும்.

(iv) களை எடுப்புப் பாடல் – பயிர்களின் இடையே உள்ள வேண்டாத புல் பூண்டுகளைக் களைந்து எடுக்கும்போது பாடப்படும்.

(v) அறுவடைப் பாடல் – நெல் முற்றியவுடன் அறுவடை செய்யும் போது பாடப்படும்

## கவிதைப்பேழை - கோணக்காத்துப் பாட்டு

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வானில் கரு ………… தோன்றினால் மழை பொழியும் என்பர்.

**அ) முகில்** ஆ) துகில் இ) வெயில் ஈ) கயல்

2. முறையான உடற்பயிற்சியும் சரிவிகித உணவும் ……………….யும் ஓட்டிவிடும்.

அ) பாலனை **ஆ) காலனை** இ) ஆற்றலை ஈ) நலத்தை

3. விழுந்ததங்கே' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ………..

அ) விழுந்த + அங்கே ஆ) விழுந்த + ஆங்கே

**இ) விழுந்தது + அங்கே** ஈ) விழுந்தது + ஆங்கே

4. செத்திறந்த' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ……………

அ) செ + திறந்த ஆ) செத்து + திறந்த

இ) செ + இறந்த **ஈ) செத்து + இறந்த**

5. பருத்தி + எல்லாம் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் …………

அ) பருத்தி எல்லாம் **ஆ) பருத்தியெல்லாம்**

இ) பருத்தெல்லாம் ஈ) பருத்திதெல்லாம்

## ஆ. குறுவினா

**1. கப்பல் கவிழ்ந்ததற்குக் காரணமாகக் கோணக்காத்துப் பாட்டு கூறுவது யாது?**

கடலில் விரைந்து வந்த கப்பல் எமனைப் போல வந்த பெருமழையினாலும் சுழல் காற்றினாலும் கவிழ்ந்தது.

**2.புயல் காற்றினால் தொண்டைமான் நாட்டில் ஏற்பட்ட அழிவு யாது?**

தொண்டைமான் நாட்டில் சிறப்பாக வைக்கப்பட்ட மரங்கள் அனைத்தும் சின்னாபின்னமாக ஒடிந்து விழுந்தன.

**3. கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி யாது?**

கொல்லிமலை பற்றிப் பாடல் கூறும் செய்தி : சித்தர்கள் வாழும் கொல்லிமலையைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் புயல் அடித்தது.

## இ. சிறுவினா

**1. புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள் யாவை?**

புயல் காற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட நிலைகளாகப் பாடல் குறிப்பிடும் கருத்துகள்:

(i) வாங்கல் என்னும் ஊரில் அழகாக வைக்கப்பட்ட தென்னம்பிள்ளைகள் எல்லாம் வீணாயின.

(ii) அழிவில்லாத காங்கேய நாட்டின் மேட்டுப் பகுதிகளில் வளர்ந்திருந்த பருத்திச் செடிகள் எல்லாம் சிதைவு அடைந்து வெறும் குச்சிகளாக மாறின.

**2. கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் யாவை?**

கோணக்காற்றால் வீடுகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகள் : திரண்டு எழுந்த மேகங்களால் உருவான காற்று வேகமாக அடித்ததால் பெரிய வீடுகளின் கூரைகள் எல்லாம் மொத்தமாகப் பிரிந்து சரிந்தன. அழகிய சுவர்களை உடைய மாடி வீடுகள் அடியோடு விழுந்தன.

## ஈ. சிந்தனை வினா

**1. இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாக நீங்கள் எவற்றைக் கருதுகிறீர்கள்?**

இயற்கைச் சீற்றங்களால் பாதிப்பு ஏற்படாமல் தவிர்க்கச் செய்ய வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

**புயல், மழை :**

ஏரிக்கரை மற்றும் ஆற்றோரச் சாலைகளில் நடப்பதைத் தவிர்க்க வேண்டும்; மரங்களின் கீழே நிற்பதைத் தவிர்க்க வேண்டும். சாக்கடை நீர் வடிகால்கள், வாய்க்கால்கள் போன்றவற்றை அடைப்பில்லாமல் சீர் செய்து வைத்துக் கொள்ள வேண்டும். கழிவுநீர்த் தொட்டிகள் எப்போதும் மூடிய நிலையில் வைத்திருக்க வேண்டும்.

சாலையில் மின்கம்பிகள் விழுந்திருந்தால் அவற்றைத் தொடக்கூடாது. மின்சாதனங்கள், எரிவாயுப் பொருள்கள் பழுதுபட்டிருந்தால் அவற்றைப் பயன்படுத்தக்கூடாது. தற்போது மின்சார வாரியமே புயல், மழை என்றால் மின்சாரத்தைத் துண்டித்து விடுகின்றனர். புயலின்போது வெளியில் செல்லாமல் இருப்பது சாலச் சிறந்தது. அவசியம் ஏற்பட்டால் மட்டுமே வாகனங்களில் செல்லலாம்.

வெள்ளப் பெருக்கென்றால் வேடிக்கை பார்க்கச் செல்வதைத் தவிர்க்கலாம். இடி மின்னலின்போது மரத்தின்கீழ் நிற்கக் கூடாது. செல்பேசி, வீட்டுச்சாவி, தீப்பெட்டி மெழுகுவர்த்தி, தண்ணீர்ப் புட்டிகள் முதலிய அவசியமான பொருள்களை ஒரே இடத்தில் வைத்திருக்க வேண்டும். முதலுதவி பெட்டி ஒவ்வொருவர் வீட்டிலும் இருப்பது அவசியம். அவசர உதவிக்கான தொலைபேசி எண்களை அனைவரும் அறிந்திருத்தல் அவசியம்.

**நிலநடுக்கம் :**

நிலநடுக்கத்தின் போது அடுக்ககங்களில் இருப்பவர்கள் மின் தூக்கியைப் பயன்படுத்தக்கூடாது. வீட்டை விட்டு வெளியே வந்து வெட்ட வெளியில் நிற்கலாம். மரங்கள், மின்கம்பங்கள் இல்லாத இடமாகப் பார்த்து நிற்க வேண்டும். பாலங்களைக் கடக்கக்கூடாது.

## உரைநடை - நிலம் பொது

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1.செவ்விந்தியர்கள் நிலத்தைத் ...................... மதிக்கின்ற னர்.

**அ) தாயாக** ஆ) தந்தையாக இ) தெய்வமாக ஈ) தூய்மையாக

2. 'இன்னோசை' என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது .................

அ) இன் + ஓசை ஆ) இனி + ஓசை **இ) இனிமை + ஓசை** ஈ) இன் + னோசை

3. பால் + ஊறும் என்பதனைச் சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல் ...................

அ) பால் ஊறும் **ஆ) பாலூறும்** இ) பால்லூறும் ஈ) பாஊறும்

**ஆ. தொடரில் அமைத்து எழுதுக**

1. வேடிக்கை – விபத்து <u>நேரிட்டால்</u> வேடிக்கை பார்க்காமல் உதவி செய்ய வேண்டும்.

2. உடன்பிறந்தார் – உற்றார், உறவினர், <u>உடன்பிறந்தார்</u>, நண்பர் என அனைவருடனும் பாகுபாடின்றி அன்புடன் பழக வேண்டும்.

**இ. குறுவினா**

**1. விலை கொடுத்து வாங்க இயலாதவை எனச் சியாட்டல் கூறுவன யாவை?**

விலைகொடுத்து வாங்க இயலாதவை : காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் யாருக்கும் சொந்தமானவை அல்ல. எனவே இவற்றை விலை கொடுத்து வாங்க இயலாது.

**2. நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு யாது?**

நிலத்திற்கும் செவ்விந்தியர்களுக்கும் உள்ள உறவு : செவ்விந்தியர்கள் நிலத்தைத் தாயாகக் கருதுகிறார்கள். தாய் சேய் உறவு.

**3. எதனைத் தம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்?**

(i) எருமைகள் கொல்லப்படுவது,

(ii) எங்கு பார்த்தாலும் மக்கள் நடமாட்டம் அதிகரித்தல்,

(iii) தொன்மையான மலைகளை மறைத்துத் தொலைபேசிக் கம்பிகள் பெருகி வருதல் ஆகியனவற்றைத் தம்மால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை எனச் சியாட்டல் கூறுகிறார்.

**ஈ. சிறுவினா**

**1. நீர்நிலைகள் குறித்துச் சியாட்டல் கூறியுள்ளவற்றை எழுதுக.**

(i) “ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவுகூர்பவை.

(ii) இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்கள்.

(iii) இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள்.

(iv) இவர்கள்தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள். எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர். குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர்.

(v) இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீரன்று; எமது மூதாதையரின் குருதியாகும்" இவ்வாறு சியாட்டல் கூறுகிறார்.

**2. எவையெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்?**

(i) "இந்தப் பூமி எமது மக்களுக்குத் தாயாகும். அதனால் இப்பூமியை எமது மக்கள் எப்பொழுது மறப்பதேயில்லை.

(ii) நாங்கள் இந்த மண்ணுக்கு உரியவர்கள்; இந்த மண்ணும் எமக்குரியது.

(iii) இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள். மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள்.

இவைகளையே ஒரே குடும்பத்தை சேர்ந்தவை என்று சியாட்டல் கூறுகிறார்.

## உ. நெடுவினா

**1. தாய்மண் மீதான செவ்விந்தியர்களின் பற்றுக் குறித்துச் சியாட்டல் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை :**

தாய்மொழி, தாய்நாடு மீது அனைவருக்கும் பற்று இருக்கும். அதன்படி செவ்விந்தியர்கள் தாய்மண் மீது வைத்துள்ள பற்றினைப் பற்றிய சுகுவாமிஷ் பழங்குடியினரின் தலைவரான சியாட்டல் கூறுவதைப் பார்ப்போம்

**ஒரே குடும்பம் :**

காற்றின் தூய்மையும் நீரின் உயர்வும் அனைவருக்கும் பொதுவானவை. இப்பூமியில் உள்ள ஒவ்வொரு ஊசியிலையும் அனைத்துக் கடற்கரைகளும் கருமரங்களில் தவழும் பனித்துளிகளும் இன்னிசை எழுப்பும் பூச்சி வகைகளும் இவர்களுக்குப் புனிதமானவை. இந்தப் பூமி.

எமது மக்களுக்குத் தாயாகும். இங்குள்ள நறுமணம் மிகுந்த மலர்கள் யாவும் எமது சகோதரிகள், மான்கள், குதிரைகள், கழுகுகள் போன்ற அனைத்தும் எமது சகோதரர்கள். மலைமுகடுகள், பசும்புல்வெளிகளின் பனித்துளிகள், மட்டக் குதிரைகளின் உடல் சூட்டின் இதமான கதகதப்பு போன்றவையும் இங்குள்ள மனிதர்கள் எல்லாமும் ஒரே குடும்பம்.

**நீர்நிலைகள் :**

"ஏரிகளில் பிரதிபலிக்கும் நினைவு எச்சங்கள், எம்மக்களின் வாழ்வியல் நிகழ்வுகளை நினைவு கூர்பவை. இந்த நீரின் முணுமுணுப்புகள் எம் பாட்டன்மார்களின் குரல்கள். இந்த ஆறுகள் யாவும் எம் உடன்பிறந்தவர்கள்.

இவர்கள்தாம் எமது தாகத்தைத் தீர்க்கிறார்கள். எம்மக்களின் தோணிகளையும் இவர்களே சுமந்து செல்கின்றனர். குழந்தைகளுக்கு உணவளிக்கின்றனர். இங்குள்ள ஓடைகளிலும் ஆறுகளிலும் ஓடும் வனப்புமிகு நீரானது வெறும் தண்ணீ ரன்று; எமது மூதாதையரின் குருதியாகும்.

**தாய் தந்தை :**

இந்தப் பூமியை விலை கொடுத்து வாங்குபவர்கள் அயலவர்கள். இப்பூமி அவர்களின் உடன்பிறந்தார் அன்று. பகைவரே. இதனை வாங்குபவர்கள் வாங்கிய பின் இந்நிலத்தைவிட்டுச் சென்றுவிடுவார்கள்.

மண்ணை மறந்துவிடுவார்கள். இப்பூமியைப் பாலைவனமாக்கிவிடுவார்கள். ஆனால் செவ்விந்தியர்கள் பூமியைத் தாயாகவும் வானத்தைத் தந்தையாகவும் கருதுவார்கள்.

**முடிவுரை :**

நாம் அனைவரும் தாய் மொழி, தாய்நாடு மீது பற்று வைத்திருக்க வேண்டும், இந்த மண்ணுக்கு உரியவர்கள் நாம், இந்த மண்ணுலகம் எமக்குரியது என்று எண்ண வேண்டும் என செவ்விந்தியர்களுக்கு சியாட்டல் அறிவுரை கூறுகிறார்.

## ஊ. சிந்தனை வினா

**1. நிலவளத்தினைக் காப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய செயல்களாக நீங்கள் கருதுவன யாவை?**

(i) நிலங்களை மண் அரிப்பிலிருந்து பாதுகாப்பதற்காக நிறைய மரங்களை வளர்த்தல்.

(ii) ஏரி, குளம், போன்ற நீராதாரங்களைத் தூர்வாரச் செய்து மழைக் காலங்களில் நீரைச் சேமித்தல் மற்றும் அதிகளவில் அணைகளைக் கட்டுதல்.

(iii) ஒவ்வொரு வீட்டிலும் மழைநீர்த் தொட்டித் திட்டத்தைக் கட்டாயம் நிறைவேற்றச் செய்வேன்.

(iv) நம் நாட்டின் மண்வளத்திற்கேற்ற புதிய வேளாண்மையைப் பரிந்துரை செய்தல். இயற்கை வேளாண் திட்டத்தை கட்டாயப்படுத்துதல்.

(v) நெகிழியைப் பயன்படுத்தாமல் தவிர்த்தல்.

(vi) வீட்டு விலங்குகள், வனவிலங்குகள் அழியாமல் பாதுகாத்தல்.

(vii) செல்பேசி கோபுரங்கள் இல்லாமல் செல்பேசியை இயங்கச் செய்தல்.

## கற்கண்டு - வினைமுற்று

### அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. மாடு வயலில் புல்லை மேய்ந்தது. – இத்தொடரிலுள்ள வினைமுற்று ...................

அ) மாடு ஆ) வயல் இ) புல் **ஈ) மேய்ந்தது**

2. பின்வருவனவற்றுள் இறந்தகால வினைமுற்று .....................

**அ) படித்தான்** ஆ) நடக்கிறான் இ) உண்பான் ஈ) ஓடாது

3. பின்வருவனவற்றுள் ஏவல் வினைமுற்றுச் சொல் ...........

அ) செல்க **ஆ) ஓடு** இ) வாழ்க ஈ) வாழிய

### ஆ. சிறுவினா

**1. வினைமுற்று என்றால் என்ன?**

பொருள் முற்றுப் பெற்ற வினைச்சொற்கள் முற்றுவினை அல்லது வினைமுற்று எனப்படும். (எ.கா.) மலர்விழி எழுதினாள்.

**2. தெரிநிலை வினைமுற்று எவற்றைக் காட்டும்?**

செய்பவர், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் ஆகிய ஆறனையும் தெரிநிலை வினைமுற்று காட்டும். (எ.கா.) எழுதினாள்

செய்பவர் – மாணவி

காலம் – இறந்தகாலம்

கருவி – தாளும் எழுதுகோலும்

செய்பொருள் – கட்டுரை

நிலம் – பள்ளி

செயல் – எழுதுதல்

**3.வியங்கோள் வினைமுற்று விகுதிகள் யாவை?**

வியங்கோள் வினைமுற்று விகுதிகள் : க, இய, இயர், அல்.

**4. ஏவல் வினைமுற்றுக்கும் வியங்கோள் வினைமுற்றுக்கும் இடையேயுள்ள வேறுபாடுகள் யாவை?**

| ஏவல் வினைமுற்று | வியங்கோள் வினைமுற்று |
|---|---|
| முன்னிலையில் வரும். | இருதிணை, ஐம்பால், மூவிடங்களுக்கும் பொதுவாய் வரும். |
| ஒருமை, பன்மை வேறுபாடு உண்டு. | ஒருமை, பன்மை வேறுபாடு இல்லை. |
| கட்டளைப் பொருளை மட்டும் உணர்த்தும். | வாழ்த்துதல், வைதல், விதித்தல், வேண்டல் ஆகிய பொருள்களை உணர்த்தும். |
| விகுதி பெற்றும் பெறாமலும் வரும். | விகுதி பெற்றே வரும். |

## மொழியை ஆள்வோம்

### அ. தமிழ் எண்கள் அறிவோம்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| க | உ | ங | ச | ரு | சு | எ | அ | கூ | க0 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| கக | கஉ | கங | கச | கரு | கசு | கஎ | கஅ | ககூ | உ0 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| உக | உஉ | உங | உச | உரு | உசு | உஎ | உஅ | உகூ | ங0 |

### ஆ. வண்ணமிடப்பட்டுள்ள எண்களுக்குரிய தமிழ் எண்களை எழுதுக

1. உலக ஈர நில நாள் பிப்ரவரி 2. **உ**
2. உலக ஓசோன் நாள் செப்டம்பர் 16. **கசு**
3. உலக இயற்கை நாள் அக்டோபர் 3. **ங**
4. உலக வனவிலங்கு நாள் அக்டோபர் 6. **சு**
5. உலக இயற்கைச் சீரழிவுத் தடுப்பு தினம் அக்டோபர் 5. **ரு**

**இ. கொடுக்கப்பட்டுள்ள தொடர்களின் வகையைக் கண்டறிந்து எழுதுக.**

1. முக்காலமும் உணர்ந்தவர்கள் நம் முன்னோர்கள். **செய்தித் தொடர்**
2. கடமையைச் செய் **ஏவல் தொடர்/விழைவுத்தொடர்**
3. பாரதியார் பாடல்களின் இனிமைதான் என்னே! **உணர்ச்சித் தொடர்**
4. நீ எத்தனை புத்தகங்களைப் படித்திருக்கிறாய்? **வினாத்தொடர்**

**ஈ. தொடர்களை மாற்றுக.**

(எ.கா.) நேற்று நம் ஊரில் மழை பெய்தது. (வினாத்தொடராக மாற்றுக.)

நேற்று நம் ஊரில் மழை பெய்ததா?

**1. காடு மிகவும் அழகானது. (உணர்ச்சித் தொடராக மாற்றுக.)**:

ஆ! காட்டின் அழகுதான் என்னே !

**2. ஆ! பூனையின் காலில் அடிபட்டுவிட்டதே! (செய்தித் தொடராக மாற்றுக.)**

பூனையின் காலில் அடிபட்டுவிட்டது.

**3.அதிகாலையில் துயில் எழுதுவது நல்லது. (விழைவுத் தொடராக மாற்றுக**.)

அதிகாலையில் துயில் எழு.

**4.முகில்கள் திரண்டால் மழை பெய்யும் அல்லவா? (செய்தித் தொடராக மாற்றுக.)**

முகில்கள் திரண்டால் மழை பெய்யும்.

**5.காட்டில் புலி நடமாட்டம் உள்ளது. (வினாத்தொடராக மாற்றுக.)**

காட்டில் புலி நடமாட்டம் உள்ளதா?

**உ. உரிய வினைமுற்றுகளைக் கொண்டு கட்டங்களை நிரப்புக**.

| | நட | உண் | உறங்கு |
|---|---|---|---|
| ஆண்பால் | நடக்கிறான் | உண்கிறான் | உறங்குகிறான் |
| பெண்பால் | நடக்கிறாள் | உண்கிறாள் | உறங்குகிறாள் |
| பலர்பால் | நடக்கின்றனர் | உண்கின்றனர் | உறங்குகின்றனர் |
| ஒன்றன் பால் | நடக்கிறது | உண்கிறது | உறங்குகிறது |
| பலவின் பால் | நடக்கின்றன | உண்கின்றன | உறங்குகின்றன |
| தன்மை | நடக்கிறேன் | உண்கிறேன் | உறங்குகிறேன் |
| முன்னிலை | நடக்கிறாய் | உண்கிறாய் | உறங்குகிறாய் |
| படர்க்கை | நடக்கிறார்கள் | உண்கிறார்கள் | உறங்குகிறார்கள் |
| இறந்தகாலம் | நடந்தான் | உண்டான் | உறங்கினான் |
| நிகழ்காலம் | நடக்கிறான் | உண்கிறான் | உறங்குகிறான் |
| எதிர்காலம் | நடப்பான் | உண்பான் | உறங்குவான் |

**ஊ. வினைமுற்றுக்கு உரிய வேர்ச்சொல்லை எழுதுக**

1. நடக்கிறது – நட
2. போனான் – போ
3. சென்றனர் – செல்
4. உறங்கினாள் – உறங்கு
5. வாழிய – வாழ்
6. பேசினாள் – பேசு
7. வருக – வா
8. தருகின்றனர் – தா
9. பயின்றாள் – பயில்
10. கேட்டார் – கேள்

## வாழ்வியல் - திருக்குறள்

**அ. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக**

1. புகழாலும் பழியாலும் அறியப்படுவது ....................

அ) அடக்கமுடைமை ஆ) நாணுடைமை

**இ) நடுவுநிலைமை** ஈ) பொருளுடைமை

2.பயனில்லாத களர்நிலத்திற்கு ஒப்பானவர்கள் ................

அ) வலிமையற்றவர் **ஆ) கல்லாதவர்**

இ) ஒழுக்கமற்றவர் ஈ) அன்பில்லாதவர்

3.'வல்லுருவம்' – என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது ................

அ) வல் + உருவம் **ஆ) வன்மை + உருவம்**

இ) வல்ல + உருவம் ஈ) வல்லு + உருவம்

4. நெடுமை + தேர் என்பதனைச் சேர்தெழுதக் கிடைக்கும் சொல் ................

அ) நெடுநேர் ஆ) நெடுத்தேர் **இ) நெடுந்தேர்** ஈ) நெடுமைதேர்

5.வருமுன்னர்' – எனத் தொடங்கும் குறளில் பயின்று வந்துள்ள அணி ..................

அ) எடுத்துக்காட்டு உவமை அணி ஆ) தற்குறிப்பேற்ற அணி

**இ) உவமை அணி** ஈ) உருவக அணி

## ஆ. குறுவினா

**1. சான்றோர்க்கு அழகாவது எது?**

தான் சமமாக இருந்து தன்னிடம் வைக்கப்படும் பொருள்களின் எடையைத் துலாக்கோல் சரியாகக் காட்டும். அதுபோல நடுவுநிலைமையுடன் சரியாகச் செயல்படுவதே சான்றோர்க்கு அழகாகும்.

**2. பழியின்றி வாழும் வழியாக திருக்குறள் கூறுவது யாது?**

தலைவன் முதலில் தன் குற்றத்தைக் கண்டு நீக்கி, அதன்பின் பிறருடைய குற்றத்தை ஆராய்ந்தால், அவனுக்கு எந்தப் பழியும் ஏற்படாது.

**3. 'புலித் தோல் போர்த்திய பசு' என்னும் உவமையால் திருக்குறள் விளக்கும் கருத்து யாது?**

மனத்தை அடக்கும் வல்லமை இல்லாதவர் மேற்கொண்ட வலிய தவக்கோலம், புலியின் தோலைப் போர்த்திக் கொண்ட பசு பயிரை மேய்ந்ததைப் போன்றது.

## இ. திருக்குறளைச் சீர்பிரித்து எழுதுக

**1. தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தால் காணப்படும்.**

தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப் படும்.

**2. தொடங்கற்க எவ்வினையு மெள்ளற்க முற்று மிடங்கண்ட பின் அல்லது.**

தொடங்கற்க எவ்வினையும் எள்ளற்க முற்று
இடங்கண்ட பின்அல் லது.

## ஈ. கோடிட்ட இடத்தை நிரப்புக

1. வலியில் நிலைமையான் வல்லுருவம் **பெற்றம்**
   புலியின்தோல் **போர்த்து** மேய்ந் தற்று.
2. விலங்கொடு **மக்கள்** அனையர் **இலங்குநூல்**
   கற்றாரோடு ஏனை யவர்.

**உ. சீர்களை முறைப்படுத்தி எழுதுக**

1. யாழ்கோடு அன்ன கொளல் கணைகொடிது
   வினைபடு பாலால் செவ்விதுஆங்கு.

விடை:

கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங்கு அன்ன

வினைபடு பாலால் கொளல்.

**ஊ. படங்களுக்கு பொருத்தமான திருக்குறளை எழுதுக**



1. விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
   கற்றாரோடு ஏனை யவர்.



2. கடல்ஓடா கால்வல் நெடுந்நேர் கடல் ஒடும்
   நாவாயும் ஓடா நிலத்து.